DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC 1214. / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 2 |
| Name | திரு. ஜெ. பாக்கியராஜ் |
| Father Name | ஜெயசந்திரன் |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | மேலாளர், சேவை பிரிவு பாரத ஸ்டேட் வங்கி , ஸ்ரீவைகுண்டம் கிளை |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜர் . எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்) )**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 22-08-2025.(நேரம்: 12.06PM )

**முதல்விசாரணை**

1. நான் தற்போது பாரத ஸ்டேட் வங்கியின் ஸ்ரீவைகுண்டம் கிளையில் சேவை பிரிவின் மேலளாராக பணியாற்றி வருகிறேன்.

2. என்னிடம் காண்பிக்கப்படும் அசாஆ 1 ஆன தாவா வழக்கு காசோலை ஆனது P. அழகர் என்ற வாடிக்கையாளர் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

3. எதிரியின் சேமிப்பு கணக்கு எண் 31039519205 என்ற வங்கி கணக்கிற்கு எங்களது வங்கியில் வழங்கப்பட்ட காசோலை ஆகும்.

4. பொதுவாக எங்கள் கிளையில் காசோலையானது வசூலுக்காக வரும்பட்சத்தில் அதில் தேதி, தொகை மற்றும் கையொப்பம் யாருடைய பேருக்கு வழங்கப்பட்டுள்ளது போன்ற விவரங்களை நாங்கள் மேல்கண்ட காசோலையில் இருக்கிறதா என்று சரிபார்த்தப்பிறகு பணம் வழங்குவதா வேண்டாமா என்ற முடிவுக்கு வருவோம்.

5.எதிரி எங்களது வங்கியில் கணக்கு தொடங்குவதற்காக கொடுக்கப்பட்ட படிவம் மாசாஆ 6 ல் P. அழகர் என கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

6.அசாஆ 1 ல் எதிரியின் பெயர் D. அழகர் என அச்சுப்பிழை காரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியம் சொல்ல அழைப்பாணை வந்துள்ளதா என்றால் வந்துள்ளது. அந்த அழைப்பாணையில் இன்று நீதிமன்றத்தில் நான் கொண்டு வந்துள்ள ஆவணங்களை கொண்டு வரசொல்லி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மசாஆ 1 காசோலையில் D. அழகர் என்று தவறாக அச்சியிடப்பட்டுள்ளது தொடர்பாக P. அழகருக்கு எங்களுடைய வங்கியிலிருந்து அறிவிப்பு எதுவும் அனுப்பபட்டுள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

3. மசாஆ 1காசோலை வசூலுக்கு வந்த நேரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனக்கு வந்த அழைப்பாணையில் அக்கவுண்ட் ஒப்பனிங் பார்ம் மற்றும் அதற்கான ஆவணங்கள், நகல்கள் மட்டுமே கேட்டுள்ளனர் எனவே எனக்கு அதுப்பற்றி சொல்ல இயலாது.

4. தாவா காசோலை பற்றிய விவரங்களை எனக்கு வந்த அழைப்பாணையில் சொல்லப்படவில்லை என்பதால் எனக்கு காசோலை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

5. நான் இந்த வங்கி கிளைக்கு மாறுதலாகி வந்தது எப்போது எனக் கேட்டால் 2024 ஜுன் 6 ஆம் தேதி ஆகும்.

//சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.//

(ஒ/ம்)G.ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண்.1(மு.பொ)
ஸ்ரீவைகுண்டம்.